[28th August 1970

திரு. பி. திருஞானசம்பந்தம்: துணைத்தலைவர் அவர்களே, சிவகங்கை தாலுகா பகுதியில் கடந்த மூன்று நான்கு வருடங்களாகத் தண்ணீர் விடவில்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. மதியழகன் : நான் அதைத்தான் சொன்னேன். தண்ணீர் விடப்படவில்லை என்று சொன்னேன். பல இடங்களில் அதற்கான வரி வஜா செய்யப்பட்டிருக்கிறது. சில இடங்களில் தவறுதலாக யாராவது வரி கட்டியிருப்பார்களானால், வரி வஜா என்று அனுமதிக்கப்பட்டிருக்கிற இடங்களில் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

Separate Flag for the State

*1.S.N.*Q.* THIRU D. SANTOSHAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to have a separate flag for the State ;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) the details of the flag ?

மாநிலத்திற்குத் தனிக் கொடி

திரு. டி. சந்தோஷம் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இம் மாநிலத்திற்காகத் தனிப்பட்டதொரு கொடியை வைத்துக் கொள்ளும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

(உ) அக்கொடி பற்றிய விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு மாநிலத்திற்கு என்று தனியாக கொடி ஒன்றினை ஏற்படுத்தி, அதனை மாநில முதலமைச்சர் மற்றுமுள்ள அமைச்சர்களின் கார்களிலும், வீடுகளிலும் மாநில அளவில் பறக்க விடுவதற்கு இம்மாநிலத்திற்கு தனிக்கொடி வேண்டும் என்று கருதப்பட்டது.

(உ) தமிழ் நாட்டுக்கென்று கோரப்பட்டுள்ள கொடியில் தமிழ் நாட்டின் சின்னமாகிய கோபுரம் ஒரு பகுதியிலும் தேசீயக்கொடி ஒரு பகுதியிலும் இருக்கும்.

THIRU D. SANTOSHAM : Mr. Deputy Chairman, Sir, there is no doubt that such a flag is really necessary for our State and, in fact, such a flag ought to have been designed even when the State Emblem was designed or at least when the National Flag was designed. But, inasmuch as it was not done then, was there any special occasion or necessity felt just now to think of this flag ? If so, can the House be taken into confidence and the reasons therefor given ?

28th August 1970]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எண்ணங்கள் எழுவதற்கு நேரம் காலம் பார்க்க வேண்டிய அவசியம் எதுவுமில்லை.

THIRU D. SANTOSHAM : There is really no Constitutional provision or any other legal impediment in the way of the State having its own flag. In fact, there is a flag even for our Inspector-General of Police. Where was the necessity for taking the permission of the Centre ? Was it just because we wanted to have the National Flag also in one corner and if so, was it necessary to have the National Flag at all in one corner of our flag ? In fact, the various States in America all have flags. Not one of them has stars and stripes. In fact, it will be really good if the entire flag is totally different from the National Flag. That would be a proper thing. Where was the need for having the National Flag in one corner of our flag ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தேசியக் கொடியை இணைத்தே நாம் நம் தமிழ் நாட்டுக்குக் கொடி கேட்கிற இந்த நேரத்திலேயே, நம்முடைய தேச பக்தியைச் சந்தேகிக்கிறார்கள் என்ற காரணத்தால், தேசியக் கொடியும் அதில் இணைக்கப்பட்டு, இந்த உணர்வுக்கு எந்த விதமான உள்நோக்கமும் கிடையாது, பிரிவினை மனப்பான்மையும் கிடையாது என்று நிலைநிறுத்துகிற அளவில்தான் கேட்கிறோம். அதே நேரத்தில் மாநிலத்திற்கு என்று ஒரு தனிக் கொடி தேவை என்று வலியுறுத்தும் வகையில் தான் கோபுரச் சின்னத்தையும் இதில் சேர்த்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல், இப்படி ஒரு கொடி அமைத்துக்கொள்வதைத் தடுப்பதற்கு அரசியல் அமைப்புச்சட்டத்தில் எதுவுமில்லை என்றுதான் கருதப்படுகிறது.

திரு. கே. ராஜாராம் : துணைத் தலைவரவர்களே, இம்மாதிரியாக நமக்கென ஒரு கொடி வைத்துக்கொள்வதற்கு அரசியல் நிர்ணயச் சட்டத்திலோ வேறு எதிலோ எந்தவிதமான தடையும் இல்லை என்று முதலமைச்சர் அவர்களே தெரிவித்துவிட்டார்கள். அப்படியிருக்க, தனிக் கொடி வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டிருக்க வேண்டிய அவசியமில்லை. மேலும் இதற்கு இவ்வளவு விளம்பரப்படுத்தியிருக்க வேண்டியதில்லை. நாமே வைத்துக்கொண்டிருக்கலாம். ஆனால் இப்போது நாடு போய்க்கொண்டிருக்கிற போக்கில் பிரிவினை மனப்பான்மை ஒவ்வொரு மாநிலத்திலும் வளர்ந்துகொண்டிருக்கிறது. ஒரு மாநிலத்தில் உற்பத்தியாகிற நதித் தண்ணீரை அடுத்த மாநிலத்திற்குக் கொடுக்க மறுக்கிறார்கள். இந்த நிலையில் ஒவ்வொரு மாநிலமும், நாம் நினைப்பது போல், தங்களுக்குத் தனிக் கொடி வைத்துக்கொண்டு அந்தக் கொடியின்கீழ்போராட்டங்கள்ஆரம்பித்துவிட்டால், நாட்டின் கதி என்ன ஆவது? நாட்டின் ஒற்றுமை சிதைந்துவிடாதா ? இதையெல்லாம் எண்ணியாவது இதைக் கேட்பது சரிதானா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். இப்போதே 'பிரசிடெண்டு'க்கு ஒரு தனிக் கொடி, கவர்னருக்கு ஒரு தனிக் கொடி, ஐ.ஜி. அவர்களும் தனிக் கொடி என்று இப்படியெல்லாம் தனித் தனியாகக் கொடி வைத்துக் கொண்டிருப்ப 4-10 p.m.

தோடு, மாநிலத்திற்கென்று தனிக் கொடியையும் வைத்துக்கொண்டால், அது அந்த நாட்டின் ஐக்கிய பாவத்தை குலைப்பதற்குத் தவிர வேறு எதற்கும் பயன்படாது. தேசம் முழுவதும் எல்லோரும் ஒரே ஒரு கொடியைத்தான் வைத்திருக்க வேண்டும். வேறு கொடியை வைத்துக் கொள்ளக்கூடாது என்று வலியுறுத்தி, அதற்கென்று ஒரு கிளர்ச்சியை முதல்வர் அவர்களே ஆரம்பிப்பார்களா ? முதலமைச்சர் அவர்களே இதை மேற்கொண்டு மத்திய அரசுக்கு எழுதி, போராடத் தயாராக இருப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறியதைப் போல், ஐ.ஜி. அவர்களும், கவர்னர் அவர்களும், இன்னும் சொல்லப்போனால், மாநகராட்சி மன்றம்கூட தனிக் கொடி வைத்துக் கொண்டிருக்கும்போது, இதன் காரணமாக எந்தச் சண்டையும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அதைப் போலவே, மாநிலத்திற்கு மாநிலம் எத்தனையோ மாறுபட்ட சின்னங்களைக் காண்கிறோம். அவைகளைத் தனித் தனியாகப் பார்ப்போமானால், தமிழ் நாட்டுக்குத் தனிச் சின்னமாக நாம் கோபுரத்தைக் கொண்டிருக்கிறோம். ஆந்திரப் பிரதேசம் தனக்கெனத் தனிச் சின்னத்தைக் கொண்டிருக்கிறது. நேற்று சட்ட மன்றப் பேரவையில் சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் நம் தமிழ் நாட்டுத் தனிக் கொடியில் 'புலி, வில், கயல்' ஆகிய மூன்றையும் போட வேண்டுமென்று கேட்டதைப்போல், உத்திரப் பிரதேச அரசுச் சின்னத்தில் வில்லும் மீனும் போடப்பட்டிருக்கிறதைப்பார்த்து, நானே ஆச்சரியப்பட்டேன். மேற்கு வங்கத்தில் புலியைச் சின்னமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். வேறு சில மாநிலங்களில் வேறு எந்தச் சின்னமும் அமைக்காமல், அசோகச் சின்னத்தை மட்டும் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படி மாநிலத்திற்கு மாநிலம் தனித்தனிச் சின்னம் இருந்தும், எப்படி தகராறு ஏற்படாமல் இருந்ததோ, அதைப்போலவே மாநிலத்திற்கு என்று தனிக் கொடி இருந்தாலும், தகராறு ஏற்படாது. மேலும் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னபடி, மாநிலத்திற்கு மாநிலம் தனிக் கொடி இல்லாதபோதே கூட, நதி நீர்ப் பங்கீட்டில் சண்டை ஏற்படுகிறது என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

திரு. கே. ராஜாராம் : நமது மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் பிற மாநிலங்களில் குடியிருக்கிறார்கள். அதைப் போலவே பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் நம் மாநிலத்தில் வாழ்கிறார்கள். உதாரணமாக நம் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் பக்கத்தில் உள்ள பங்களூரில் குடியிருக்கிறார்கள். அங்கே உள்ள அந்த நண்பர்கள் நம் நாட்டுக் கொடியை ஏற்றவேண்டும் என்பார்கள். அந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள், 'கொடியை இறக்கு' என்பார்கள். இதனால் அனாவசியமான சண்டை, குழப்பங்கள் எல்லாம் உண்டாகும். எனவே நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி, தேசம் பூராவுக்கும் ஒரே கொடிதான் இருக்க வேண்டும். ராஷ்டிரபதியானாலும் சரி, கவர்னர்களானாலும் சரி, அந்தக் கொடியைத் தவிர வேறு ஒரு கொடியையும் வைத்துக்கொள்ளக் கூடாது என்று ஒரு கிளர்ச்சியை மேற்கொண்டு அதன் மூலம் ஒற்றுமையை உண்டு பண்ண முதலமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

28th August 1970]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஸ்விட்ஜர்லாந்து நாட்டின் மொத்த ஜனத்தொகையே 60 லட்சம்தான். ஆனால் நம் நாட்டில் 50 கோடி பேர் இருக்கிறோம். 60 லட்சம் பேரைக் கொண்ட ஸ்விட்ஜர்லாந்து நாட்டில், நம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பார்க்க வேண்டும் என்று விரும்புகிறேன், 25 கொடிகள் இருக்கின்றன. 13,000 பேரைக் கொண்ட ஒரு மண்டலத்திற்கு ஒரு கொடி இருக்கிறது. 23,000 பேரைக் கொண்ட ஒரு மண்டலத்திற்கு ஒரு கொடி இருக்கிறது. அங்கே 1 லட்சம் பேரைக் கொண்ட மண்டலத்திற்கும் ஒரு கொடி இருக்கிறது. ஒரு மண்டலத்தில் வாழ்கிறவர்கள் இன்னொரு மண்டலத்திற்குப் போய் அங்கே தங்கள் மண்டலத்தின் கொடியை நாட்ட வேண்டும் என்று சொல்லவில்லை. அங்கே உள்ள பிரஜைகள் இன்னொரு இடத்தில் போய்க் கொடியேற்ற முடியாது. அந்தந்த மாநிலத்தின் கொடியைத்தான் பறக்கவிட வேண்டும். அப்படிப் பறக்கவிடுகிற அளவில் எந்தவிதமான தகராறும் ஏற்பட வழியில்லை. பிரஜைகள் இந்தக் கொடியைப் பயன்படுத்த வேண்டும் என்றில்லை. அதோடு ஒன்றையும் நாம் காண வேண்டும். தனிக் கொடியில்லாத நேரத்தில்தான் தாளவாடி நடக்கிறது. கொடியில்லாத நேரத்தில் தான் மைசூருக்கும் மகாராஷ்டிரத்திற்கும் எல்லைத் தகராறு ஏற்பட்டிருக்கிறது. எனவே கொடியால் புதிதாகத் தகராறு வந்து விடாது. அடுத்து, ஏன் இவ்வளவு விளம்பரம் இந்தத் தனிக் கொடி விவகாரத்திற்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டார்கள். யாரும் விளம்பரம் கொடுக்கவில்லை. தனிக் கொடி வேண்டும் என்று அரசுத் துறையில் கேட்டோம். ஆனால் அதற்குப் பிறகு அதற்கு விளம்பரம் கொடுத்தது யார் என்பது மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும்.

திரு. எம். ஆறுமுகசாமி : தேசியக் கொடியும் சில கட்சிகளின் கொடியும் ஒன்றுபோல் இருப்பதால், மக்களில் பலருக்கும் சில நேரத்தில் குழப்பம் ஏற்படுவதாலும், என்னைப் போன்றவர்களைக்கூட இந்தக் கொடிகள் ஏமாற்றும் சூழ்நிலை இருப்பதாலும், தேசியக் கொடியை மாற்றி வேறு கொடியை வைத்தால், ஒரு வேளை இந்தத் தனிக் கொடிப் பிரச்னை கைவிடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தேசியக் கொடியை மாற்றி வேறு ஒரு கொடியை வைக்க வேண்டும், அல்லது தேசியக் கொடி ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டு விட்டதால், அதைப் போன்ற சாயலுள்ள கொடி வைத்திருக்கும் கட்சிகள் தங்கள் கொடியையாவது மாற்றிக் கொள்ள வேண்டும் என்று ஏற்கெனவே மூதறிஞர் இராஜாஜி போன்றவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். தேசியக் கொடி எந்த வடிவத்தில் அமைக்கப்பட்டாலும், மாநிலத்திற்கு ஒரு கொடி தேவை என்பதை நாம் வலியுறுத்துவது நியாயமேயாகும்.

திரு. கே.எஸ். அப்துல் வகாப் : அமைச்சர்களுடைய கார்களிலும் இப்போது தேசியக் கொடியை ஏற்றிச் செல்கிறார்கள். அப்படி ஏற்றிச் செல்ல வேண்டும் என்று சட்டப்படி நிர்ப்பந்தம் ஏதாவது இருக்கிறதா? அப்படி இல்லாத நேரத்தில், தனிக் கொடி வேண்டும் என்ற கோரிக்கையை அவர்கள் மத்திய அரசைக் கேட்காமலேயே ஏற்படுத்திக் கொண்டிருக்க முடியுமே. இந்தியப் பிரதமர் அவர்கள் தனிக் கொடி விஷய

மாக முதலமைச்சர்கள் மகாநாட்டில் பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் முதலமைச்சர்கள் மகாநாட்டில் மெஜாரிட்டி முதலமைச்சர்கள் தனிக் கொடி தேவையில்லை என்று தீர்மானித்தால், அந்தத் தீர்மானத்திற்கு நம் தமிழக முதலமைச்சர் கட்டுப்படுவாரா அல்லது தீர்மானத்தை மீறிச் செயல்படுவாரா என்று அறிய விரும்புகிறேன். அத்துடன் உத்தேசிக்கப்பட்டிருக்கும் கொடியின் சின்னம் அல்லது பாகங்களின் நிறம் என்னவாய் இருக்கும்? தனி நிறமா அல்லது இரு நிறங்களாக இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : முதலில் கொடியை இந்த மன்றத்திற்குக் காட்டி விடுகிறேன். (மன்றத்திற்கு கொடியின் மாதிரி காட்டப்பட்டது). ஆகவே இதிலே யாரும் சந்தேகப்படுகிற அளவுக்கு ''அந்த நிறம் இல்லை''. எல்லா முதலமைச்சர்களும் இந்த விஷயத்தில் கலந்து ஆலோசிக்கப்படுவார்கள் என்று இந்தியப் பிரதமர் அவர்கள் கூறியதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வினா எழுப்பி, அதற்குத் தமிழக முதலமைச்சர் கட்டுப்படுவாரா என்று கேட்டிருக்கிறார்கள். நான் தெளிவாக ஏற்கெனவே விளக்கியிருக்கிறேன். அந்தந்த முதலமைச்சர் தங்கள் தங்கள் மாநிலத்திற்குத் தனிக் கொடி வேண்டுமா வேண்டாமா என்று நிர்ணயித்துக் கொள்ளலாமே தவிர, பிற மாநிலத்திற்கு வேண்டுமா வேண்டாமா என்று நிர்ணயிக்கும் உரிமை முதலமைச்சர்களுக்கு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : முதலமைச்சர் அவர்களுடைய அறிக்கையில் அமைச்சர்களுடைய கார்களிலும், அமைச்சர்களுடைய வீடுகளிலும் தான் இந்தக் கொடி பறக்க விடப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். சாதாரணமாக கொடியேற்று விழா போன்ற விழாக்களில் அந்தக் கொடி ஏற்றப்படுமா இல்லையா என்று விளக்கம் சொல்லுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது குறித்து ஏற்கெனவே அரசுத் துறையில் சொல்லப்பட்டிருக்கிறது. தேசிய விழாக்கள் அனைத்திலும் இப்போது பறக்கவிடுவதைப் போலவே, தேசியக் கொடி தான் பறக்க விடப்படும். மாநில அளவில் நடக்கும் விழாக்களில் இந்தக் கொடியும் பறக்கவிடப்படும். அமைச்சர்கள் மாநில அளவில் கலந்துகொள்ளுகிற திருவிழாக்கள்அனைத்திலும் தேசிய கீதம் எப்படிப்பயன்படுகிறதோ, எப்படி அமைச்சர்கள் கலந்துகொள்ளுகிற நிகழ்ச்சிகளில் தேசிய கீதத்திற்குமதிப்பும் முக்கியத்துவமும் அளிக்கப்படுகிறதோ, அதைப்போலவே இனியும் தேசியக் கொடியின் மதிப்பும் கௌரவமும் காப்பாற்றப்படும்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : இந்த உத்தேசக் கொடியின் உபயோகம் என்ன என்பதை முதலமைச்சர் அவர்கள் கூறும்போது, அது அமைச்சர்கள் கார்களிலும் வீடுகளிலும் பறக்க விடப்படும் என்று சொன்னார்கள். தேசிய விழாக்கள் சம்பந்தப்பட்ட மட்டில் ஏற்கெனவே உள்ள தேசியக் கொடியும், மாநில அளவில் நடக்கும் விழாக்களில் இந்தக் கொடியும் உபயோகப்படுத்தப்படுமா என்பதற்கு விளக்கம் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

28th August 1970]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தேசிய விழாக்கள் கூட மாநில அளவில் நடத்தப்படுகிற விழாக்கள்தான். இந்தியாவின் சுதந்திர தின விழாவும் குடியரசு தின விழாவும் நடக்கிற நேரத்தில், மாநிலங்களில் எல்லாம் இந்தக் கொடிதான் ஏற்றப்படும். அரசாங்க அலுவலகங்களில்கூட இப்போது இருக்கிற தேசியக் கொடிதான் ஏற்றப்படும்.

திரு. டி.கே. ஷண்முகம் : துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் அனுமதி இல்லாமலேயே நாம் தனிக் கொடி வைத்துக் கொள்ள நமக்கு உரிமை இருக்கிறதா இல்லையா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதற்காகக் குறிப்பாக எந்தச் சட்டமும் இல்லை. நாம் மத்திய அரசிடம் அனுமதி கேட்டிருப்பதற்குக் காரணம், நாம் நம் கோபுரச் சின்னத்தோடு ஒரு கொடியை அமைக்க வேண்டும் என்று எண்ணிய நேரத்தில், இப்போதுள்ள தேசியக் கொடியையும் அதில் ஒரு பக்கத்தில் இணைக்க வேண்டும் என்று விரும்பியதால் தான்.

திரு. எம். எத்திராஜுலு : நேற்றைய முன் தினம் முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்றிருந்தபோது, பிரதமரிடம் இந்தத் தனிக் கொடி விஷயமாகப் பேசினார்களா ? அப்படிப் பேசினால், பிரதமர் தனிக் கொடி வைத்துக் கொள்ளலாம் என்று சம்மதம் தெரிவித்தார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தியப் பிரதமர் அவர்களைப் பொறுத்த வரையில், அவர் பல வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கிற காரணத்தாலும், பல வெளிநாடுகளில் கூட்டாட்சி முறையில் ஆட்சி நடைபெறுவதைப்பற்றி நன்கு அறிந்திருக்கிற காரணத்தாலும், அந்த ஆட்சி அமைக்கப்பட்டிருக்கிற பல்வேறு மாநிலங்களில் தனித் தனியாகக் கொடிகள் இருக்கின்றன என்பதை அறிந்திருக்கிற காரணத்தாலும், நாடாளுமன்றத்திலும், டெல்லி மாநிலங்களின் அவையிலும் அங்கெல்லாம் இருக்கிற நிலைமையை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இது ஒன்றும் புதிய கோரிக்கை அல்ல, வேறு பல வெளிநாடுகளில் மாநிலத்திற்கு மாநிலம் தனித் தனியாகக் கொடி இருக்கிறது என்று கூறினார்கள். நான் சந்தித்தபோது, இதைப்பற்றி முதலமைச்சர்களிடம் கலந்து பேசப் போகிறேன் என்று சொன்னார்கள். எனவே நான் இதைப்பற்றி அவரிடம் விளக்கமாகப் பேசவில்லை.

THIRU D. SANTOSHAM : Sir, the design of this flag is quite an important matter. If we decide on a particular design today, it is going to be handed over from generation to generation. It is very important that this decision should not be taken in haste, as an executive decision. It would be very desirable if a small committee of experts is constituted to call for various designs and then some decision is taken after the opinion of the public and the opinion of both the Houses are also taken into account. Will the Government adopt this course, as it has not been so far adopted ? Before a decision is taken, will the Government decide to call for various designs and call for the opinion of experts and also take the opinion of both the Houses ?

[28th August 1970

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : டெல்லியிலிருந்து என்ன பதில் வருகிறது என்று நாம் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். இப்போதுள்ள தேசியக் கொடியைக்கூட டெல்லி நாடாளுமன்றத்தில் மறைந்த முன்னாள் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் ஒரு தீர்மானமாகக் கொண்டுவந்த பிறகுதான், அது '-ஆக்ட்'' ஆக உருவாக்கப் பட்டது. ஆகவே நாமும் நம்முடைய மாநிலத்திற்கு என்று தனிக் கொடி உருவாக்கும்போது, கட்டாயம் மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப்போல், அதற்கான விதி முறையை வகுத்துக் கொள்ளலாம்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : கொடியின் உபயோகத்தைப்பற்றி முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மாநில அளவில் திறப்பு விழாக்கள், அதாவது கட்டிடத் திறப்பு விழாக்கள் போன்றவை இருக்கின்றன. அத்தகைய மாநில விழாக்கள் நடத்தும்போது, இந்தக் கொடியும் உபயோகப்படுத்தப்படுமா என்பதுபற்றி விளக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தேசியக் கொடிக்கென்று சில விதிமுறைகள் இருக்கின்றன. நாடாளுமன்றத்தில் பிரதமர் அவர்கள் சொன்னார்கள் என்று குறிப்பிட்டேன். அரசியலமைப்புக் குழுவில் தான் பண்டித நேரு அவர்கள் சொன்னார்கள். அந்த வகையில் நம்முடைய தேசியக் கொடிக்கு என்ன விதி முறைகள் அமைக்கப்பட்டிருக்கின்றனவோ, அதைப் போலவே மாநிலக் கொடிக்கும் இறுதி முடிவெடுக்கும்போது, எல்லோரையும் கலந்து ஆலோசித்து ஏற்படுத்திக் கொள்ளலாம்.

Deputy Superintendent of Police, Ramanathapuram

*31. Q.—THIRU SAW GANESAN : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether any complaint was made to the superior officers of the Police Department about the Deputy Superintendent of Police, Ramanathapuram, Ramanathapuram district during May, 1970 ; and

(*b*) the action taken on the petition given to the superior officers of the Police Department complaining that he has been taking a partial attitude and threatening the trustees of the Hindu Temple at Alagankulam to vacate the temple lands ?

இராமநாதபுரத்தில் உள்ள போலீஸ் உதவிக் கண்காணிப்பாளர்

திரு. சா. கணேசன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இராமநாதபுரம் மாவட்டம் இராமநாதபுரத்தில் உள்ள போலீஸ் உதவிக் கண்காணிப்பாளர் (Deputy Superintendent of Police) மீது 1970-ஆம் வருடம் மே மாதத்தில் காவல் துறை மேலதிகாரிகளிடத்தில் புகார் ஏதேனும் செய்யப்பட்டதா ?

(இ) அவர் ஒரு தலைச் சார்பாக இருந்து கொண்டு அழகன்குளம் ஹிந்துக் கோயில் இடத்தைக் காலி செய்ய வேண்டுமென்று அதன் தர்மகர்த்தாக்களை அச்சுறுத்தி வருவது பற்றி போலீஸ் மேலதிகாரிகட்குக் கொடுக்கப்பட்ட மனுவின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது ?